# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 147/மா/2025**

**நாள்: 25.09.2025**

| | | |
|---|---|---|
| திரு. S. பாண்டியன்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தாம்பரம் மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–117, பழைய பல்லாவரம், நம்மாழ்வார் குறுக்குத்தெரு, கதவு எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. பாண்டியன் என்பவரின் 23.04.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.04.2025 அன்று பெறப்பட்டு, 147/மா/2025, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–117, பழைய பல்லாவரம், நம்மாழ்வார் குறுக்குத்தெரு, கதவு எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. பாண்டியன் என்பவர் தனது 23.04.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

Payment Pending Details:
Tambaram-Zone 5

| S. No. | Name of the work | Work order Date | M. Book No. | Bill Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Generator amc melachery head works | 30.06.2020 | 272/2020-21 | 8.67 |
| 2. | Transformer amc melachery headworks | 30.06.2020 | 274/2020-21 | 8.36 |
| 3. | Generator amc at OHT in East Tambaram | 30.06.2020 | 273/2020-21 | 6.61 |
| | Total | | | 23.64 |

Tambaram-Zone 4

| S. No. | Name of the work | Work order Date | M.Book No. | Bill Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Servicing of Generator at Vengadamangalam Composts yard. | 26.02.2021 | 3/21/2022 | 5 |
| 2. | Servicing of Transformer at Vengadamangalam Composts yard. | 26.02.2021 | 4/21/2022 | 5 |
| Total | | | | 10 |

Pallavaram-Zone 2

| S. No. | Name of the work | Work order Date | M.Book No. | Tender Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Motor Amc Chrompet Area. | 28.02.2020 | 41/2020-21 | 8 |
| 2. | Motor Amc Toilet, Oht tank, Govt. buildings. | 28.02.2020 | 39/2020-21 | 8 |
| 3. | Drilling of Borewell at Vengadamangalam | 31.03.2020 | 161/2020-21 | 6.5 |
| Total | | | | 22.5 |

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 13.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர் தனது 26.06.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1875/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 4–இல் 2021 ஆம் ஆண்டு பணி உத்திரவு வழங்கி, முடிக்கப்பட்ட பணிகளுக்கு தொகை வழங்கப்படவில்லை என்று ஒப்பந்ததாரர் திரு. எஸ். பாண்டியன் (Guru Engineering) அவர்களால் அளிக்கப்பட்ட மனு குறித்து, கீழ்க்கண்ட விவரப்படி மண்டலம் 4–குட்பட்ட இரண்டு பணிகளுக்கு தொகை வழங்கப்படாதது தொடர்பாக அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | பணி ஆணை நாள் | அளவு புத்தக எண். | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | Servicing of Generator 500 KVA at Vengadamangalam site | **26.02.2021** | **03/2021–22** | **6.02** |
| 2. | Servicing of 1200 KVA Transformer and ACB at Vengadamangalam site | **26.02.2021** | **04/2021–22** | **6.41** |

மேற்காண் பணிகள் மேற்கொள்ள உரிய வழிமுறைகளை பின்பற்றி மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு இப்பணிகளை மேற்கொள்ள பணி ஆணைகள் வழங்கியதன் நேர்வில், பணிகள் முடிக்கப்பட்டு 11.05.2021–இல் முதல் மற்றும் இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தொகை வழங்க அனுப்பப்பட்டது. அச்சமயத்தில், நகராட்சியின் நிதி இருப்பு குறைவாக இருந்த காரணத்தினால் (கொரானா நோய் தொற்று காலம்) தொகை வழங்க தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனிடையில் தாம்பரம் நகராட்சியானது மாநகராட்சியாக தரம்

உயர்த்தப்பட்ட காரணத்தினால், தரத்திற்கேற்ப அதிகாரிகள் பணியிட மாற்றம் ஏற்பட்டது. இதனால் இக்கோப்புகள், தேக்கம் அடைந்தது. மேலும், ஒப்பந்தாரர் மூலம் இப்பட்டியல் தொகைகளை வழங்க கோரிய போது உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் இக்கோப்புகளை மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது. இவ்வாறு இக்கூற்றினால் பட்டியல் தொகைகள் வழங்க கால தாமதம் ஏற்பட்டது. தற்போது உரிய பரிசீலனை செய்து நிலுவை தொகைகள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்ற விபரம் இதன் மூலம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையாளர் தனது 26.06.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1875/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

''தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5–இல் 2020 ஆம் ஆண்டு பணி உத்திரவு வழங்கி, முடிக்கப்பட்ட பணிகளுக்கு தொகை வழங்கப்படவில்லை என்று ஒப்பந்ததாரர் திரு. எஸ். பாண்டியன் (Guru Engineering) என்பவரால் அளிக்கப்பட்ட மனு குறித்து, கீழ்க்கண்ட விவரப்படி மண்டலம் 5–குட்பட்ட மூன்று பணிகளுக்கு தொகை வழங்கப்படாதது தொடர்பாக அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | பணி ஆணை நாள் | அளவு புத்தக எண். | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | Generator amc melachery head works | 30.06.2020 | 272/2020-21 | 8.67 |
| 2. | Transformer amc melachery headwork | 30.06.2020 | 274/2020-21 | 8.36 |
| 3. | Generator amc at OHT in East Tambaram | 30.06.2020 | 273/2020-21 | 6.61 |

மேற்காண் பணிகள் மேற்கொள்ள உரிய வழிமுறைகளை பின்பற்றி மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு இப்பணிகளை மேற்கொள்ள பணி ஆணைகள் வழங்கியதன் நேர்வில், பணிகள் முடிக்கப்பட்டு 09.07.2021–இல் முதல் மற்றும் இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தொகை வழங்க அனுப்பப்பட்டது. அச்சமயத்தில், நகராட்சியின் நிதி இருப்பு குறைவாக இருந்த காரணத்தினால் (கொரனா நோய் தொற்று காலம்) தொகை வழங்க தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனிடையில் தாம்பரம் நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட காரணத்தினால், தரத்திற்கேற்ப அதிகாரிகள் பணியிட மாற்றம் ஏற்பட்டது. இதனால் இக்கோப்புகள், தேக்கம் அடைந்தது. மேலும், ஒப்பந்தாரர் மூலம் இப்பட்டியல் தொகைகளை வழங்க கோரிய போது உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் இக்கோப்புகளை மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது. இவ்வாறு இக்கூற்றினால் பட்டியல் தொகைகள் வழங்க கால தாமதம் ஏற்பட்டது. தற்போது உரிய பரிசீலனை செய்து நிலுவை தொகைகள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்ற விபரம் இதன் மூலம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

5. தாம்பரம் மாநகராட்சி ஆணையர் தனது 01.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2473/2025/இ2–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

''தாம்பரம் மாநகராட்சி மண்டலம் II–ல் 2021 ஆம் ஆண்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு முடிக்கப்பட்ட குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சம்பந்தமாக பயன்படுத்தப்படும் மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு

பணிகளுக்கு தொகை வழங்கப்படவில்லை என்ற புகார் அளிக்கப்பட்ட நேர்விற்கு கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது:

மேற்படி பணிகள் சம்பந்தமான கோப்புகள் மற்றும் அளவுப் புத்தகங்கள் பல்லாவரம் நகராட்சியாக இருந்த காலத்திற்குட்பட்டதாகும். அக்டோபர் 2021–ல் தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது பல்லாவரம் நகராட்சி தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. தற்போது தாம்பரம் மாநகராட்சி மண்டலம் II ஆக செயல்பட்டு வருகிறது. மேற்படி கோப்புகள் மற்றும் அளவுப் புத்தகங்கள் தாம்பரம் மாநகராட்சி மண்டலங்களுடன் இணைக்கப்பட்டதால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் கோரிக்கையின்படி பில்பட்டியல் வழங்குவது குறித்து நான்கு வார கால அவகாசம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

6. தாம்பரம் மாநகராட்சி ஆணையர் தனது 04.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1875/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"தாம்பரம் மாநகராட்சியின் 26.06.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டுள்ள விவரப்படி மண்டலம் 4–க்குட்பட்ட இரண்டு பணிகளுக்கு தொகை வழங்கப்படாதது தொடர்பாக அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | பணி ஆணை நாள் | அளவு புத்தக எண். | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | Servicing of Generator 500 KVA at Vengadamangalam site | 26.02.2021 | 03/2021–22 | 6.02 |
| 2. | Servicing of 1200 KVA Transformer and ACB at Vengadamangalam site | 26.02.2021 | 04/2021–22 | 6.41 |

மேற்காண் பணிகள் மேற்கொள்ள உரிய வழிமுறைகளை பின்பற்றி மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு இப்பணிகளை மேற்கொள்ள பணி ஆணைகள் வழங்கியதன் நேர்வில், பணிகள் முடிக்கப்பட்டு 11.05.2021–இல் முதல் மற்றும் இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தொகை வழங்க அனுப்பப்பட்டது. அச்சமயத்தில், நகராட்சியின் நிதி இருப்பு குறைவாக இருந்த காரணத்தினால் (கொரனா நோய் தொற்று காலம்) தொகை வழங்க தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனிடையில் தாம்பரம் நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட காரணத்தினால், தரத்திற்கேற்ப அதிகாரிகள் பணியிட மாற்றம் ஏற்பட்டது.

இதனால் இக்கோப்புகள், தேக்கம் அடைந்தது. மேலும், ஒப்பந்தாரர் மூலம் இப்பட்டியல் தொகைகளை வழங்க கோரிய போது உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் இக்கோப்புகளை மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது.

உரிய பரிசீலனைக்கு பின்னர் தற்போது திரு. எஸ். பாண்டியன் (Guru Engineering) என்ற ஒப்பந்ததாரருக்கு நிலுவையில் உள்ள பில் பட்டியல் தொகை வழங்க வேண்டி மாமன்ற பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாமன்ற அனுமதி பெறப் பெற்றவுடன் பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

7. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.08.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சிக்கு பின்வரும் பணி செய்த வகையில் (Guru Engineering) ரூ.56 இலட்சம் வரவேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

Payment Pending Details:

Tambaram-Zone 5

| S. No. | Name of the work | Work order Date | M.Book No. | Bill Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Generator amc melachery head works | 30.06.2020 | 272/2020-21 | 8.67 |
| 2. | Transformer amc melachery headwork | 30.06.2020 | 274/2020-21 | 8.36 |
| 3. | Generator amc at OHT in East Tambaram | 30.06.2020 | 273/2020-21 | 6.61 |
| Total | | | | 23.64 |

Tambaram-Zone 4

| S. No. | Name of the work | Work order Date | M.Book No. | Bill Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Servicing of Generator at Vengadamangalam Compost yard. | 26.02.2021 | 3/21/2022 | 5 |
| 2. | Servicing of Transformer at Vengadamangalam Compost yard. | 26.02.2021 | 4/21/2022 | 5 |
| Total | | | | 10 |

Pallavaram-Zone 2

| S. No. | Name of the work | Work order Date | M.Book No. | Tender Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Motor Amc Chrompet Area. | 28.02.2020 | 41/2020-21 | 8 |
| 2. | Motor Amc Toilet, Oht tank, Govt. buildings. | 28.02.2020 | 39/2020-21 | 8 |
| 3. | Drilling of Borewell at Vengadamangalam | 31.03.2020 | 161/2020-21 | 6.5 |
| Total | | | | 22.5 |

மண்டலம் 2க்கு பணி செய்த வகையில் அதற்கான கோப்பினை பெற்று மீண்டும் திருமதி மாலா, தொழில்நுட்ப உதவியாளர், மண்டலம் 3 மற்றும் திரு விக்னேஷ், இளநிலை உதவியாளர், மண்டலம் 4 ஆகிய அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மேற்கண்ட தொகையினை எனக்கு விரைவாக வழங்கிட தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

9. தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–4–ன் உதவி செயற்பொறியாளர் **07.08.2025** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டது. அதன்படி பின்வரும் ஒப்பந்தப்பணிகள்

Tambaram-Zone 4

| வ. எண் | பணியின் பெயர் | பணி ஆணை நாள் | அளவு புத்தக எண். | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | Servicing of Generator 500 KVA at Vengadamangalam site | 26.02.2021 | 03/2021–22 | 6.02 |
| 2. | Servicing of Generator 1200 KVA at Vengadamangalam site | 26.02.2021 | 04/2021–22 | 6.41 |

Tambaram-Zone 5

| S. No. | Name of the work | Work order Date | M.Book No. | Bill Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Generator amc melachery head works | 30.06.2020 | 272/2020-21 | 8.67 |
| 2. | Transformer amc melachery headwork | 30.06.2020 | 274/2020-21 | 8.36 |
| 3. | Generator amc at OHT in East Tambaram | 30.06.2020 | 273/2020-21 | 6.61 |
| Total | | | | 23.64 |

S.பாண்டியன் அவர்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட பணிகள் உரிய வழிமுறைகளை பின்பற்றி ஒப்பந்ததாரருக்கு ஆணைகள் வழங்கியதன் நேர்வில், பணிகள் முடிக்கப்பட்டு 11.05.2021ல் இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தொகை வழங்க அனுப்பப்பட்டது. தாம்பரம் மாநகராட்சியில் நிதி இருப்பு குறைவாக இருந்த காரணத்தால் (கொரானா நோய் தொற்று காலம்) தொகை வழங்க தாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் தாம்பரம் நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்ந்தப்பட்ட காரணத்தால் அதிகாரிகள் பணியிட மாற்றம் ஏற்பட்டது. இதனால் கோப்புகள் தேக்கம் ஏற்பட்டது. ஒப்பந்ததாரர் இப்பட்டியல் தொகை வழங்க கோரிய போது உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் கோப்புகளை மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது. தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 5 மண்டலமாக பிரிக்கப்பட்டபோது பழைய பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நடைபெற்ற பணிகள் குறித்த கோப்புகளை அந்தந்த மண்டல அலுவலர்கள் சரிபார்ப்பதற்கு பதிலாக பிற மண்டல அலுவலர்களைக் கொண்டு அக்கோப்புகளை ஆய்வு செய்து அவர்களிடமிருந்து அறிக்கை சான்றிதழ் பெற்று தொகை வழங்க வலியுறுத்தப்பட்டது. ஒப்பந்ததாரர் இப்பட்டியல் தொகை வழங்க கோரிய போது உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் கோப்புகளை மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது. தற்போது நிலுவைத் தொகைகள் ஒரு மாதத்திற்குள் வழங்க

உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

10. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் II–ன் உதவி செயற்பொறியாளர் 07.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

மண்டலம் 2க்குட்பட்ட மூன்று பணிகளுக்கு தொகை வழங்கப்படாதது தொடர்பாக அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| S. No. | Name of the work | Work order Date | M.Book No. | Tender Value (in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Motor Amc Chrompet Area. | 28.02.2020 | 41/2020-21 | 8 |
| 2. | Motor Amc Toilet, Oht tank, Govt. buildings. | 28.02.2020 | 39/2020-21 | 8 |
| 3. | Drilling of Borewell at Vengadamangalam | 31.03.2020 | 161/2020-21 | 6.5 |
| Total | | | | 22.5 |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உரிய வழி முறைகளை பின்பற்றி ஒப்பந்ததாரருக்கு பணி ஆணைகள் வழங்கி பணிகள் முடிக்கப்பட்டு 09.07.2021 முதல் மற்றும் இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தொகை வழங்க அனுப்பப்பட்டது. அச்சமயத்தில் நகராட்சியின் நிதி இருப்பு குறைவாக இருந்த காரணத்தினால் மற்றும் கொரானா நோய் தொற்று பரவியிருந்த காரணத்தினாலும், தொகை வழங்க தாமதம் ஏற்பட்டது. அச்சமயத்தில் அதிகாரிகள் பணியிட மாற்றத்தினாலும், கோப்புகள் தேக்கம் அடைந்தது. உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் இக்கோப்புகளை மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது.

மனுதாரர் தான் செய்த பணிக்கான கோப்புகளை அளவு புத்தகம் உட்பட அலுவலகத்திலிருந்து பெற்று உரிய அலுவலர்களிடமிருந்து ஒப்புதல் பெற்று திரும்ப சமர்ப்பிப்பதாக தெரிவித்தார். ஆனால் இதுவரை மீண்டும் ஒப்படைக்கப்படவில்லை என்று மண்டலம் 1–ன் உதவியாளர் திருமதி ஆர். லலிதா மேரி மற்றும் மண்டலம் 2 வருவாய் பிரிவு இளநிலை உதவியாளர் ப. லிடியா செல்வகுமாரி ஆகியோர் தங்களது கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள்.

தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 5 மண்டலமாக பிரிக்கப்பட்டபோது பழைய பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நடைபெற்ற பணிகள் குறித்த கோப்புகளை அந்தந்த மண்டல அலுவலர்கள் சரிபார்ப்பதற்கு பதிலாக பிற மண்டல அலுவலர்களைக் கொண்டு அக்கோப்புகளை ஆய்வு செய்து அவர்களிடமிருந்து அறிக்கை சான்றிதழ் பெற்று தொகை வழங்க வலியுறுத்தப்பட்டது. ஒப்பந்ததாரர் இப்பட்டியல் தொகை வழங்க கோரிய போது உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் கோப்புகளை குழு மூலம் மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது. மேற்படி குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நிலுவைத் தொகைகள் ஒரு மாதத்திற்குள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

11. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள், மண்டல 4 மற்றும் 5–ன் உதவி ஆணையர்களின் அறிக்கைகள்,

மண்டலம் 4–ன் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மண்டலம் 2–ன் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5–இல் 2020 ஆம் ஆண்டு பணிக்கான உத்திரவு வழங்கி, முடிக்கப்பட்ட மூன்று பணிகளுக்கான ரூ.23.64 இலட்சத்திற்கான தொகை, மண்டலம் 4–இல் 2021 ஆம் ஆண்டு பணிக்கான உத்திரவு வழங்கி, முடிக்கப்பட்ட இரண்டு பணிகளுக்கான ரூ.10.00 இலட்சத்திற்கான தொகை மற்றும் மண்டலம் 2–இல் 2020 ஆம் ஆண்டு பணிக்கான உத்திரவு வழங்கி, முடிக்கப்பட்ட மூன்று பணிகளுக்கான ரூ.22.5 இலட்சத்திற்கான தொகை தாம்பரம் மாநகராட்சியால் வழங்கப்படவில்லை என்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4 மற்றும் மண்டலம் 5–ல் மேற்கண்ட ஒப்பந்ததாரரால் பணிகள் முடிக்கப்பட்டு இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, தாம்பரம் மாநகராட்சிக்கு அப்பட்டியல்களுக்கான தொகை வழங்க அனுப்பப்பட்டது என்பதும், தாம்பரம் மாநகராட்சியில் நிதி இருப்பு குறைவாக இருந்த காரணத்தால் (கொரனா நோய் தொற்று காலம்) தொகை வழங்க தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதும், இதற்கிடையில் தாம்பரம் நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட காரணத்தால் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், கோப்புகள் தேக்கம் ஏற்பட்டது என்பதும், ஒப்பந்ததாரர் இப்பட்டியல் தொகை வழங்க கோரிய போது உரிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் கோப்புகளை மறு ஆய்வு செய்து சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டு, தற்போது நிலுவைத் தொகைகள் ஒரு மாதத்திற்குள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர் மற்றும் மண்டலம் 5–ன் உதவி ஆணையாளர் ஆகியோரின் அறிக்கை மற்றும் மண்டலம் 4–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் மண்டலம் II–ன் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5–இல் 2020 ஆம் ஆண்டு பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு முடிக்கப்பட்ட மூன்று பணிகளுக்கான ரூ.23.64 இலட்சத்திற்கான தொகை, மண்டலம் 4–இல் 2021 ஆம் ஆண்டு பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு முடிக்கப்பட்ட இரண்டு பணிகளுக்கான ரூ.10.00 இலட்சத்திற்கான தொகை மற்றும் மண்டலம் 2–இல் 2020 ஆம் ஆண்டு பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு முடிக்கப்பட்ட மூன்று பணிகளுக்கான ரூ.22.5 இலட்சத்திற்கான தொகை, ஆகியவற்றிக்கான இறுதி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் ஒப்பந்ததாரரான திரு. எஸ். பாண்டியன் (Guru Engineers) என்பவருக்கு ஒரு மாதத்திற்குள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 4 மற்றும் 2 –ன் உதவி செயற்பொறியாளர் அவர்களின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1) எனவே, மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை முழுவதையும் ஒரு மாதத்திற்குள் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு ஒரு மாதத்திற்குள் விதிமுறைகளுக்குட்பட்டு உரிய நிலுவைத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்கவும்,

(2) மேலும், மனுதாரர் ஒப்பந்தப் பணி செய்து முடித்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் அவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை தொடர்பாக உரிய

நடவடிக்கை எடுக்காமல் இருந்த தாம்பரம் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்கவும்,

தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S.பாண்டியன்
(Guru Engineers)
கதவு எண்.5, நம்மாழ்வார் குறுக்கு தெரு
பழைய பல்லாவரம், சென்னை – 117.

2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

3) உதவி ஆணையர், மண்டலம் 2
தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம்.

4) உதவி ஆணையர், மண்டலம் 4
தாம்பரம் மாநகராட்சி, சென்னை–600 063.

5) உதவி ஆணையர், மண்டலம் 5,
தாம்பரம் மாநகராட்சி, சென்னை–600 059.

} தாம்பரம் மாநகராட்சி ஆணையர் வழியாக

6) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

7) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

26/9/25

செயலாளர்.